**உதவி அமர்வு நீதிமன்றம் / சார்பு நீதிமன்றம், துறையூர்**
**SC.No.139/2023**

**எதிரி ஆஜர்.**

**தேதி:06.11.2024**

2024ம் ஆண்டு நவம்பர் திங்கள் 06ம் நாள் சாட்சியாகிய அ.சா.6 வது நபரின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திருமதி.P.தமிழ்ச்செல்வி என்பவரால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சதிஸ்வரன் | தகப்பனார் பெயர் | : | மகாலிங்கம் |
| கிராமம் | : | தென்புறநாடு | தாலுக்கா | : | துறையூர் |
| தொழில் | : | கிராம உதவியாளர் | சமூகம் | : | |
| வயது | : | 36 | நாள் | : | 06.11.2024 |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல்விசாரணை:**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். 2022 7வது மாதம் தேதி 10 இருக்கும்னு நினைக்கிறேன். செங்காட்டுப்பட்டியில் மாணிக்கம் என்பவரை பிடித்து வைத்திருப்பதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நானும் VAOவும் அந்த இடத்திற்கு சென்றோம். போன போது மாணிக்கம் தன் மருமகளை காலை வெட்டி விட்டதாக சொன்னார்கள். அவர் பயன்படுத்திய கொடுவாளை பெரியசித்தூர் சாமி கோவில் அருகே ஒரு புதரில் மறைத்து வைத்திருப்பதாக சொன்னார். அதை பார்த்துட்டு வந்து பின்பு கையெழுத்து போட்டோம். இது சம்பந்தமாக போலிசார் விசாரித்தார்கள் நடந்ததை சொன்னேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் மேற்சொன்ன விவரங்களை தான் போலிஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் ஆமாம். கையெழுத்து போட்டது காவல் நிலையத்திலையா என்றால் ஆமாம். எங்களுடைய அலுவலகம் மலைஉச்சியில் இருந்தாலும் நாங்கள் கீழே சோபனபுரத்தில் தான் இருப்போம் என்றால் சரிதான். சோபனபுரத்திலிருந்து சம்பவ இடத்திற்கு போக எவ்வளவு நேரம் ஆகும் என்றால் 20 நிமிஷம் ஆகும். எதிரியிடமிருந்து எந்த ஆயுதமும் கைப்பற்றவில்லை என்றும், எதிரியிடமிருந்து எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை அதில் நான் கையொப்பமும் செய்யவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. என்னுடைய சாட்சியத்திற்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.

/ உண்மை நகல் /

(ஒம்/- எம்.ஜெய்சங்கர்)
சார்பு நீதிபதி,
துறையூர்.

**<u>உதவி அமர்வு நீதிமன்றம் / சார்பு நீதிமன்றம், துறையூர்</u>**
**<u>SC.No.139/2023</u>**

**<u>எதிரி ஆஜர்.</u>**

**<u>தேதி:06.11.2024</u>**

2024ம் ஆண்டு நவம்பர் திங்கள் 06ம் நாள் சாட்சியாகிய அ.சா.7 வது நபரின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திருமதி.P.தமிழ்ச்செல்வி என்பவரால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பன்னீர்செல்வம் | தகப்பனார் பெயர் | : நேதாஜி |
| கிராமம் | : வண்ணாடு | தாலுக்கா | : துறையூர் |
| தொழில் | : கிராம நிர்வாக அலுவலர் | சமூகம் | : |
| வயது | : 49 | நாள் | : 06.11.2024 |

**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல்விசாரணை:</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் வேலை செய்கிறேன். 7வது மாதம் 2022ம் வருடம் தேதி ஞாபகமில்லை. அன்று காலை 9 மணிக்கு காவல் நிலையத்திலிருந்து எங்களுக்கு போன் செய்தார்கள். எங்கள் பஞ்சாயத்தில் யாரையோ வெட்டி விட்டார்கள் ஆளை பிடித்து வைத்திருக்கிறோம் நீங்கள் வாருங்கள் என்று சொன்னார்கள். உடனே நானும் கிராம உதவியாளரும் தென்புறநாடுக்கு கிராமம் சென்றோம். ஊர் பெயர் டாப்செங்காட்டுப்பட்டி. நாங்கள் போகும் போது 10, 10.30 மணி இருக்கும். மாணிக்கம் என்பவர் அங்கே இருந்தார். சம்பவத்தை கேட்டோம் ஆமாம் என்று சொன்னார் அவர் வைத்திருந்த கத்தியை பக்கத்து கிராமத்தில் கோவில் பெயர் தெரியாது கோவில் பக்கத்தில் வைத்திருப்பதாக சொன்னார். நான், கிராம உதவியாளர், காவல் துறை எல்லாம் அந்த இடத்திற்கு சென்று கத்தியை எடுத்து ஸ்டேசனுக்கு வந்தோம் கையெழுத்து போட்டு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும்

ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். அது **அ.சா.ஆ.2**. அதே போல் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். அது **அ.சா.ஆ.3**. இது சம்பந்தமாக போலிஸார் விசாரித்தார்கள் நடந்ததை சொன்னேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் மேற்சொன்ன விவரங்களை தான் போலிஸ் விசாரணையிலும் சொன்னேன் என்றால் ஆமாம். நான் அந்த கிராமத்தில் எத்தனை ஆண்டுகளாக கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன் என்றால் 3 ஆண்டுகளாக பணிபுரிகிறேன். அதனால் பக்கத்தில் உள்ள ஏரியாக்கள் எல்லாம் தெரியும் என்றால் சரிதான். எங்கள் அலுவலகம் சோபனபுரத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். நான் போலிஸ் விசாரணையில் கையெழுத்து போட்டதாக சொல்லியுள்ளேன் எங்கே கையெழுத்து போட்டேன் என்றால் உப்பிலியபுரம் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டேன். நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றும் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றும், எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றும், நான் ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகஜரிலும் கையெழுத்து போடவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஏரியா முழுவதும் எனக்கு பரிட்சயம் கத்தி எடுத்த ஊர் கூட தெரியவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

/ உண்மை நகல் /

(ஒம்/- எம்.ஜெய்சங்கர்)
சார்பு நீதிபதி,
துறையூர்.

**உதவி அமர்வு நீதிமன்றம் / சார்பு நீதிமன்றம், துறையூர்**
**SC.No.139/2023**

**எதிரி ஆஜர்.**

**தேதி:06.11.2024**

2024ம் ஆண்டு நவம்பர் திங்கள் 06ம் நாள் சாட்சியாகிய அ.சா.8 வது நபரின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திருமதி.P.தமிழ்ச்செல்வி என்பவரால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | துரைசாமி | தகப்பனார் பெயர் | : | லெட்சுமணன் |
| கிராமம் | : | பச்சமலை பெரிய சித்தூர் | தாலுக்கா | : | துறையூர் |
| தொழில் | : | விவசாயம் | சமூகம் | : | |
| வயது | : | 55 | நாள் | : | 06.11.2024 |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல்விசாரணை:**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். நான் படிக்கவில்லை, சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு மாணிக்கம் என்பவர் தன் மருமகளை வெட்டிவிட்டார் என்று தகவல் கேள்விபட்டேன். நான் வயலில் வேலை பார்த்து கொண்டிருந்தேன் தகவல் கேள்விபட்டு நானும் ஓடிவந்தேன், போலிஸார் வந்தார்கள், வந்ததற்காக ஒரு கையெழுத்து போடு என்று சொன்னார்கள் நான் கையெழுத்து போட்டேன். போலிஸ் இது சம்பந்தமாக விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து. அது. **அ.சா.ஆ.4**. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து. அது **அ.சா.ஆ.5.**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் மேற்சொன்ன சங்கதிகளை தான் போலிஸார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் ஆமாம். என் வீடு ஊர்காட்டில் கடைசி வீடாக உள்ளது. போலிஸார் என்னை விசாரித்ததாக சொல்வதெல்லாம் பொய் என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.

/ உண்மை நகல் /

(ஒம்/- எம்.ஜெய்சங்கர்)
சார்பு நீதிபதி,
துறையூர்.